STC.No. 502/2024
நாள் 24.10.2025.
P.W.1 – (தெய்வம் )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

புகாஆ.3 காசோலை திருப்பப்பட்டதாக சொல்லி நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு என்றால் சரி. நான் புகாஆ.3 சட்ட அறிவிப்பில் எதிரியின் விலாசமாக க.எண்.564, மேற்கு தெரு, மாரியம்மன் நகர், பள்ளப்பட்டி எனக் குறிப்பிட்டுள்ளது. மேற்படி பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பில் காசோலை தொகை கேட்டு அறிவிப்பு அனுப்பியது போல் எதிரிக்கு வேறு எந்த முகவரிக்கும் நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல நான் அனுப்பினேன். நான் அவ்வாறு அறிவிப்பை எந்த தேதியில் என்ன முகவரிக்கு அனுப்பியதாக இந்த வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சாட்சி புகார் மனுவை பார்த்துவிட்டு சொல்லவில்லை எனத் தெரிவித்தார். எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி எதிரி பெற்றுக் கொண்டார் என்று நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆம். பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு பு.சா.ஆ.4 அஞ்சல் உறையில் Not known No such person என்ற காரணத்திற்காக அஞ்சல் துறையால் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரி.

என் சட்ட அறிவிப்பு எதிரிக்கு முறையாக சார்பாகவில்லை என்றாலும் அதனால் எனக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ய அறுகதை இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் வழங்கிய விலாசத்திற்கு தான் நான் அறிவிப்பு அனுப்பினேன். எனக்கும் எதிரிக்கும் ஒரு முரண்பாடு இருந்தது காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்தார். அவர் புகார் மனுவில் நான் சட்ட அறிவிப்பு அனுப்பிய முகவரியை குறிப்பிட்டிருந்தார். மேற்படி காவல் துறையிடம் கொடுத்த புகார் சம்மந்தமான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் திருப்புரில் வேலை பார்த்ததால் நான் எதிரியிடம் போன் மூலமாக பணத்தை கேட்டு வந்தேன். மாதம் ஒரு முறை அவரை நேரடியாக சந்தித்து பணத்தை கேட்டு வந்தேன் ஒருநாள் அவர் பணத்தை கொடுத்து கணக்கு முடிப்பதாக சொல்லியிருந்தார். அந்த சமயம் எனக்கு 10 ஆண்டுகளாக குழந்தை இல்லாததாதல் மருத்துவ செலவிற்கு பணம் தேவை இருந்தது. அன்று பணி முடிந்தவுடன் நான் எதிரிக்கு போன் செய்தேன். எதிரி தருவதாக சொல்லியிருந்த ரூ.5 லட்சத்தை கேட்டேன் அவர் சரியாக பதில் அளிக்கவில்லை. நான் ஆத்திரத்தில் பேசிவிட்டேன். அவ்வாறு பேசிவிட்டேன் என எதிரியின் மனைவிக்கு ஒரு வாய்ஸ் மெசைஜ் அனுப்பினேன். அந்த மெசைஜ் வைத்து எதிரி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

எதிரி என் மீது புகார் கொடுத்த தேதி 22.10.2023 என்றால் சரி. அந்த புகாரின் பேரில் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் சமரச மனு எண். 708/2023 பதியப்பட்டது என்றால் சரி. நான் என் வழக்கில் எதிரிக்கு 10.12.2023 அன்று பணம் கொடுத்ததாக சொல்லியிருந்தேன். நான் புகாரில் சொன்னதுபோல் எதிரிக்கு 10.12.2023 அன்று ரூ.6 லட்சம் கொடுத்திருப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றாலும் நான் அன்றைய தேதியில் எதிரிக்கு ரூ.6 லட்சம் கொடுக்கவில்லை. எங்களுக்கு இடையே ரூ.15 லட்சம் வரை கொடுக்கல் வாங்கல் இருந்தது. அந்த கொடுக்கல் வாங்கலில் பாக்கி ரூ.6 லட்சம் இருந்ததால் நான் அந்த தேதியை குறிப்பிட்டேன். நான் எதிரியிடம் பணம்

பறிக்க வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக ஒரு பொய்யான தேதியை குறிப்பிட்டு நீதிமன்றத்தில் பொய்யான புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் 22.10.2023 அன்று சமரச மனு கொடுக்கப்பட்ட பின், எதிரி என்னிடம் என்று காசோலை கொடுத்தார் என்றால் 12.03.2024 அன்று காசோலை கொடுத்தார். 22.10.2023 முதல் 12.03.2024 வரை நான் எதிரியை தொடர்பு கொள்ளவில்லை என்றால் சரி. சாட்சி தற்போது எதிரியை நேரில் சென்று சந்தித்தாக தெரிவித்தார். நான் எதிரியின் வீட்டிற்கு சென்று சந்தித்தேன். எதிரி வீட்டு முகவரி என்ன என்றால் எனக்கு தெரியாது. பின்னர் நான் அவர் அலுவலகத்திற்கு சென்று சந்தித்தேன். எதிரியின் அலுவலக முகவரி தெரியும். எதிரிக்கு அனுப்பப்பட்ட பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு திருப்பப்பட்ட பின் எனக்கு தெரிந்த எதிரியின் அலுவலக முகவரிக்கு நான் சட்ட அறிவிப்பு எதும் அனுப்பவில்லை.

என்னுடைய சொந்த ஊர் திருவேங்கடாபுரம், வெம்பக்கோட்டை தாலுகா ஆகும். நான் இந்த வழக்கில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் சமயம் திருப்புரில் இருந்தேன் என்றால் ஆம். வழக்கில் சொல்லியுள்ள தேதி பரிவர்த்தனை தவிர்த்து எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை எதிரிக்கு கொடுத்தேன் என சொல்லமுடியுமா என்றால் 26.12.2020 அன்று எதிரிக்கு ரூ.10 லட்சம் கொடுத்தது மட்டும் ஞாபகம் உள்ளது. ரூ.5 லட்சம் கொடுத்த தேதி ஞாபகம் இல்லை. நான் பிரிண்டிங் மிஷின் ஆப்ரேட்டராக வேலை பார்க்கிறேன். நான் 26.12.2020 காலகட்டத்தில் வெளிநாட்டில் பிரிண்டிங் மிஷின் ஆப்ரேட்டராக ஆப்ரிக்கா கண்டத்தில் கானா நாட்டில் வேலை பார்த்தேன் அப்போது என்னுடைய மாத சம்பளம் ரூ.60,000/– முதல் ரூ.70,000/– வரை இருந்தது. தற்போது என்னுடைய மாத சம்பளம் ரூ.35,000/–. நான் வெளிநாட்டில் வேலை பார்த்தபோது என்னுடைய சம்பள பணத்தை இந்தியாவிற்கு வங்கி பரிவர்த்தனை மூலமாகத்தான் அனுப்பமுடியும் என்றால் சரி.

26.12.2020 காலகட்டம் கோவிட் பெருந்தொற்று கால கட்டம் என்றால் கோவிட் முடிந்த சமயம் நான் அப்போது இந்தியா வந்துவிட்டேன். நான் எதிரிக்கு 26.12.2020 அன்று பணம் கொடுத்ததாக சொல்லும் தொகை நான் மூன்று வருட காலத்திற்கு திரும்ப கேட்காததால் அது காலாவதியான தொகை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எனக்கு பணம் கொடுக்க வேண்டிய தொகைக்கு நாங்கள் எங்களிடையே பிராமிசரி நோட் அல்லது வேறு கடன் ஆவணங்களை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால் சரி. நாங்கள் பத்திரம் மட்டும் ஏற்படுத்திக் கொண்டோம். நான் சொல்வது போல் எந்த பத்திரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லும் பத்திரம் என் கைவசம் உள்ளது. அந்த பத்திரத்தை பார்த்தால் எதிரிக்கு நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று எதிரி எனக்கு எவ்வளவு பணம் தரவேண்டும் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரி. அந்த பத்திரத்தில் 26.12.2020 அன்று எதிரிக்கு ரூ.10 லட்சம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது. அந்த பத்திரத்தில் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. நான் ரூ.10 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தேன்.

அந்த தொகைக்கு வட்டி 2 ஆண்டு காலம் சரியாக கொடுத்தார். மாத வட்டி ரூ.1 லட்சத்திற்கு ரூ.3,000/–. ரூ.10 லட்சத்திற்கு மாத வட்டி ரூ.30,000/–. எதிரி எனக்கு வட்டியாக மட்டும் சுமார் ரூ.7,20,000/– செலுத்தியுள்ளார் என்றால் சரி. மேற்படி வட்டித் தொகை Usurious Interest Act சட்டத்தின் படி தடை செய்யப்பட்ட பண பரிவர்த்தனை என்றால் எதிரி தான் அந்த வட்டி தொகையை ஒப்புக் கொண்டு செலுத்தி வந்தார். எதிரி

என்னிடம் அதற்கு மேலும் வட்டி தொகை செலுத்தினார் என்றாலும் காவல் நிலையத்தில் சிஎஸ்ஆர் வழங்கப்பட்ட 22.10.2023 அன்றே என்னிடம் எனக்கு செலுத்த வேண்டிய தொகையை சமரசமாக பேசி முடித்து செலுத்தினார் என்றாலும் சரியல்ல. இஸ்ரவேல் இந்த வழக்கில் 2வது சாட்சியாக சேர்க்கப்பட்டார் என்றால் சரி. இஸ்ரவேல்தான் எனக்கு எதிரியை எனக்கு அறிமுகப்படுத்தினார். இஸ்ரவேல் இந்த நீதிமன்றத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பின், STC.No. 10/2025 தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம். இஸ்ரவேலுக்கும் ஆஜர் எதிரிக்கும் ஏற்பட்ட பண பரிவர்த்தனை குறித்து எனக்கு எதும் தெரியாது என்றால் ஆம். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையேயான பண பரிவர்த்தனை குறித்து இஸ்ரவேலுக்கு தெரியாது என்றால் நான் நீதிமன்றத்தில் இஸ்ரவேலை சந்தித்தபோது சொன்னதன்பேரில் இஸ்ரவேலுக்கு தெரியும். பு.சா.ஆ.1 காசோலை எண். 211252 ஆகும். STC.No. 10/2025 வழக்கின் காசோலை எண். 211253 என்றால் எனக்கு தெரியாது. பு.சா.ஆ.1 காசோலையில் இரு நபர்களின் கையொப்பம் உள்ளது என்றால் சரி. அது ஆஜர் எதிரி மற்றும் முஜ்புர் என்பவரின் கையொப்பம் ஆகும். இந்த வழக்கு காசோலை திருப்பப்பட்டது குறித்து முஜ்புருக்கு நான் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றால் சரி.

பு.சா.ஆ.1 காசோலையில் காசோலை என்றைய தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று காட்ட எந்த முத்திரையோ பதிவோ இல்லை என்றால் சரி. பு.சா.ஆ.1 காசோலையில் தேதி அடித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியுள்ள தேதியில் எதிரிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் அந்த தேதியில் நான் பணம் கொடுக்கவில்லை. அதுவரையிலான நிலுவை தொகை அது. நான் சொல்வது போல் நிலுவை தொகை என்பதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரிக்கு நான் ரூ.10 லட்சம் கொடுத்ததாகவோ நிலுவை தொகை ரூ.6 லட்சம் இருப்பதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சங்கதிகளுடன் இந்த வழக்கு தாக்கல் செய்ததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சி இஸ்ரவேலிடம் எதிரி ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து இஸ்ரவேல் கணக்கை நேர் செய்து கொண்டார் என்றால எனக்கு தெரியாது. எதிரி இஸ்ரவேலிடம் கணக்கை நேர் செய்தபின், இந்த வழக்கு காசோலை மற்றும் STC.No. 10/2025 வழக்கு காசோலை ஆகியவற்றை திரும்ப கேட்டபின், இஸ்ரவேலிடம் இருந்த காசோலைகளில் ஒன்றைக் கொண்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மற்றொரு காசோலையை கொண்டு இஸ்ரவேல் STC.No. 10/2025 வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொன்னதுபோல் எதிரி எந்த தேதியிலும் என்னிடம் ரூ.6 லட்சம் கடன் வாங்கவில்லை என்றாலும் வழக்கு காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார் என்றாலும் இஸ்ரவேல் என் நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரிடம் இருந்த காசோலையை வைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என் மனைவி பெயர் முத்துமலர் என்றால் சரி. எதிரி என் மனைவியின் வங்கி கணக்கில்தான் மாதமாதம் வட்டி செலுத்திவந்தார் என்றால் சரி. என் வங்கி கணக்கு மற்றும் என் மனைவியின் வங்கி கணக்கு ஆகியவற்றை பார்த்தால் எதிரி மொத்தம்

எவ்வளவு தொகை செலுத்தியுள்ளார் என்ற விபரம் தெரியவரும் என்றால் ஆம். அவ்வாறு கணக்கு பார்த்தால் நான் வழக்கில் சொல்லியுள்ள தொகை ரூ.6 லட்சம் வராது என்றால் சரியல்ல. முறையாக சட்டஅறிவிப்பு எதிரிக்கு வழங்கப்படாததாலும் நான் என் முதல் விசாரணைக்கு முரணாக குறுக்கு விசாரணையில் பதில் சொல்லியுள்ளதாகவும், என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.